1. இந்நகராட்சிக்குட்பட்ட அவ்வை சண்முகம் சாலை வடசேரி ஜேந்து நிலைய சாலை, டிஸ்லரி ரோடு, டபிள்யூ.சி.சி.காலேஜ்ரோடு, எஸ்.பி.ஆபீஸ் ரோடு , கோர்ட்ரோடு, கேவ்தெரு, வெட்டூர்ணிமடம் முதல் பால் பண்ணை வரை உள்ள இடஙகளில் தார் ஒட்டுப்பணி செய்வதற்கு 28.04.2010 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

**<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>**

1. திரு.எம்.வெற்றி வேலன் (–) 22.06 % மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.பி.இசக்கிமுத்து (–) 22.75 % மதிப்பீட்டைவிட குறைவு
3. திரு.ஜே.ஜீவராஜ் (–) 21.86 % மதிப்பீட்டைவிட குறைவு

**<u>அலுவலக குறிப்பு</u>** – 1. வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி.இசக்கிமுத்து (–) 22.75% மதிப்பீட்டைவிட குறைவு கொடுத்துள்ளமையால், மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள தொகை ரூ.2,24,721/– ல் 50 % தொகையான ரூ.1,12,360/– பொதுப்பணித்துறை முதன்மை பொறியாளர் செயல்முறை உத்திரவு எண்.ஒய்.1 /50 CR /C- 10/2006 நாள் 04.02.2006 – ன்படி கூடுதல் வைப்புத்தொகையாக செலுத்திய பின்னர் வேலை உத்திரவு வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

2. அலுவலகத்திலிருந்து அனுப்பப்படும் அறிவிப்பு பெறப்பட்ட 7 தினஙகளுக்குள் கூடுதல் வைப்புத் தொகையாக ரூ.1,12,360/– ஐ நகராட்சியில் செலுத்தி வேலை உத்தரவு பெற்றுக் கொள்ளப்படாத நிலையில் மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த ஒப்பந்தக்காரரின் வைப்புத் தொகையினை பறிமுதல் செய்யவும் மேற்படி பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3.அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதியுடன் ஒப்பந்தகாரருக்கு அறிவிப்பு கடிதம் வழஙகியதற்கும் மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

4. மேற்படி கேவ்தெரு சாலை துணை முதல்வர் வருகையை ஒட்டி அவசர அவசியம் கருதி ஓட்டு வேலைகள் செய்யப்பட்டுள்ளதால், மேற்படி சாலைக்கு பதில் கோபாலபிள்ளை மருத்துவமனை முதல் மேலராமன்புதூர் சந்திப்பு வரைஉள்ள சாலையை ஒட்டுப்பணி செய்ய மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

5. நகர்மன்ற தீர்மானம் எண்.800 நாள் 26.02.2010 – ல் மன்றம் ரூ.10,00,000/– ற்கு மன்றம் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

6. மேற்படி பணிக்கு உரியதரச்சான்று பெறப்பட்ட பின்னர் பட்டியல் தொகை வழஙகவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

ம.எண்.15/2010–2011

**தீர்மான எண் : 108 – அனுமதிக்கப்பட்டது.**

2. இந்நகராட்சிக்குட்பட்ட அண்ணா பேரூந்து நிலைய வளாகத்தில் அமைந்துள்ள கடைகளின் குத்தகைதாரர்கள் தனித்தனி மின் இணைப்பு –நகராட்சி ஆணையர், நாகர்கோவில் நகராட்சி பெயரில் எடுத்துக் கொள்ள ஏதுவாக மின்பாதை விஸ்தரிப்பு செய்ய ஆகும் செலவினம் தொடர்பான மதிப்பீடு ரூ.89,690/– க்கு 26.02.2010 – ம் தியிதிய நகர்மன்ற தீர்மானம் எண்.878 – ல் பெறப்பட்ட அனுமதியின் பேரில் மேற்படி தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில் மேற்படி மின்பாதை விஸ்தரிப்பு பணிக்கு 27 அடி உயர மின் கம்பஙகள் பயன்படுத்த கொண்டு வந்ததால், மேற்படி பேருந்து நிலைய மராமத்தின் போது எதிர்காலத்தில் அசௌகரியமான நிலைகள் ஏற்படும் என்பதால் 30 அடி உயர மின்கம்பஙகள் மூலம் மின்

பாதை விஸ்தரிப்பு செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டதன் பேரில் இளநிலை மின் பொறியர் நகரபிரிவு .III தமிழ்நாடு மின்சாரவாரியம் மூலம் கூடுதலாக ரூ.28,080/– செலுத்த கேட்டுக் கொள்ப்பட்டுள்ளது. .மேற்படி மின்பாதை விஸ்தரிப்பு கட்டணம் எதிர்கால நலன் கருதி மின்வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு –</u>** 1. அனுமதிக்கலாம்.

2. மன்ற அனுமதியினை எதிர் நோக்கி மேற்படி தொகை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

கோப்பு எண்.7994/2009/அ13

**தீர்மான எண் : 109 – அனுமதிக்கப்பட்டது.**

3. இந்நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.20 சரக்கல்விளை பகுதியில் அமைந்துள்ள சிறு மின் விசை பம்புகளிலிருந்து 3 "" PVC குழாய் இணைத்து நல்லி அமைக்க கடந்த 12.05.2010 ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்

1. திரு.கே.நடராஜன் மதிப்பீட்டைவிட 0.15 % குறைவு
2. திரு.எஸ்.ராஜதுரை மதிப்பீட்டைவிட 1.34 % கூடுதல்

**<u>அலுவலக குறிப்பு –</u>** 1. நகர்மன்ற தீர்மானம்எண்.861 நாள் 26.02.2010 – ல் செலவினம் ரூ.1,60,000/– க்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

2.குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.15% குறைவாக திரு.கே.நடராஜன் கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

ம.எண்.313/2009–2010

**தீர்மான எண் : 110 – அனுமதிக்கப்பட்டது.**

4. இந்நகராட்சிக்கு சொந்தமான முக்கூடல் அணையிலிருந்து தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு வரும் 600 mm பிரதான குழாயில் அறுகுவிளை மேற்கு சந்திப்பு கேஸ்குடோன் முன்புறம் அரசன்குழி சி.எஸ்.ஐ.சர்ச் பின்புறம் 800 mm பிரதான குழாயில் மார்த்தால் பம்பு ரூமிற்கு வடக்குபகுதி மற்றும் பூதப்பாண்டி ரோடு வரகுண மஙகலம் ஆகிய பழுதிகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய கடந்த 12.05.2010 – ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்

1. திரு.எ.ஜோஸ்லின் கோல்டு லிவிஙஸ்டன்
   மதிப்பீட்டைவிட 0.05% குறைவு
2. திரு.எ.பெஞ்சமின் கோல்டு மெர்லின்
   மதிப்பீட்டைவிட 2.70 % கூடுதல்

**<u>அலுவலக குறிப்பு –</u>** 1. குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.05% குறைவாக திரு.எ.ஜோஸ்லின் கோல்டு லிவிஙஸ்டன் கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

2. நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.21/2010– 2011

**தீர்மான எண் : 111 – அனுமதிக்கப்பட்டது.**

5. இந்நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.27 பெருமாள் நகரில் இருக்கும் அடி பம்புகளை மாற்றி சுத்தம் செய்து புதிதாக 5 குதிரை வேக மோட்டார் பொருத்தி பெருமாள் நகர், ஜெயா தெரு, வனமாலீஸ்வரர் கோவில் தெரு, பயோனியர் தோப்பு, கே.பி,.ரோடு கருப்பன் செட்டித்தெரு ஆகிய பகுதிகளில் புதிதாக குழாய் பதிக்கவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.4,15,000/– க்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு

**<u>அலுவலக குறிப்பு –</u>** அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 112 – அனுமதிக்கப்பட்டது.**

6. இந்நகராட்சி வாகனம் எண்.றி.என்.74 2093 – ல் பிரேக் பழுதாகி சரிவர இயஙகாத நிலையில் உள்ளதை விலைப்புள்ளிகோரி பழுது நீக்கிடவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.3000/– க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு –</u>** 1. அனுமதிக்கலாம்.

2.தெருவிளக்கு பணியின் அவசரம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1393/2007/இ3

**தீர்மான எண் : 113 – அனுமதிக்கப்பட்டது.**

7. இந்நகராட்சி 12 – வது நிதிக்குழு பரிந்துரை திட்டம் 2009– 2010 – ன் கீழ் கணணி பயன்பாடு மற்றும் நிலுவை மின் கட்டணம் செலுத்துவதற்கு என ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.23,88,874/– உடன் பொது நிதி ரூ.1,11,126/– மொத்தம் ரூ.25.00 இலட்சத்திற்கு கணணி அறை மேம்பாடு செய்தல் பணியினை மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண்.488 , நாள் 30.10.2009 – ல் அனுமதிக்கப்பட்டது. அதன்படி பிரதான அலுவலக கட்டிடத்தின் இரண்டாவது தளத்தில் மேற்கு பகுதியில் கணணி அறை அமைப்பதற்கு முதற்கட்டணமாக ரூ.21.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிமேற்கொள்ள 31.03.2010 அன்று ஒப்பற்தப்புள்ளிகள் பெறப்பட்டது. தற்போது மேற்படி பணிகொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரிய இடத்தில் நகர்மன்ற கூட்ட அரஙகை விரிவு படுத்த வேண்டிய நிலை உள்ளதை கருதி அலுவலக முதல் தளத்தில் தற்போது வருவாய் பிரிவு இயஙகிவரும் இடத்தில் ஏற்கனவே தயார்செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டின்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரியவாறு பணி மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு –</u>** மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ள இடமும் தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ள இடமும் ஒரே அளவில் உள்ளதால் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.14737/2009/இ3

**தீர்மான எண் : 114 – அனுமதிக்கப்பட்டது.**

8. இந்நகராட்சி 12 –வது நிதிக்குழு பரிந்துரை திட்டம் 2009–2010 – ன் கீழ் ரூ.21.00 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி அலுவலக இரண்டாவது தளத்தில் புதிதாக கணணி அறை அமைத்தல் பணியினை மேற்கொள்ள 31.03.2010 அன்ற மின்னணு மூலம் ( E-Tendering ) முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஐந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. அதில் நான்கு ஒப்பந்தப்புள்ளிகள் மின்னனு முறையில் நிபந்தனையின் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத காரணத்தினால் ( BANK DD சமர்ப்பிக்காததால் ) நிராகரிக்கப்பட்டன. மீதமுள்ள ஒரு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

**ஒப்பந்தப்புள்ளி விபரம்**

1. திரு.எ.ஜோசப் நிக்சன்
   (+) 5.46 % மதிப்பீட்டைவிட கூடுதல்

**அலுவலக குறிப்பு –** 1. அனுமதிக்கலாம்.

2.வரப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டைவிட (+) 5.46 % மதிப்பீட்டைவிட கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு. திரு.எ.ஜோசப் நிக்சன், தனது 07.04.2010 – ம் தேதிய கடிதத்தில் மதிப்பீட்டைவிட (–) 0.03 % செய்து வாஙகலாம் என இசைவு கடிதம் ( Negotiation ) வழஙகி உள்ளார். எனவே மதிப்பீட்டில் இருந்து 0.03 % குறைத்து கொடுத்துள்ளதால் பணி செய்ய வேலை உத்தரவு வழஙகலாம்.

3. மேற்படி பணி திட்டப்பணி என்பதாலும் அவசரம் கருதி நகர்மன்ற தலைவர்முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழஙகியதை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

ம.எண்.306/2009–2010

**தீர்மான எண் : 115 – அனுமதிக்கப்பட்டது.**

9. இந்நகராட்சி வார்டு எண்.51 எம்.ஜி.ஆர்.நகர், ராஜீவ் நகர் மற்றும் தேவிலாட்ஜ் ஆகிய பகுதிகளில் 3 ''பிரதான குழாய் பதிக்க கடந்த 12.05.2010 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்

1. திரு.எ.பாண்டியன் மதிப்பிட்டைவிட 0.88% கூடுதல்
2. திரு.றி.துரை மதிப்பீட்லைவிட 0.031 % குறைவு

**<u>அலுவலக குறிப்பு</u> –** 1. நகர்மன்ற தீர்மானம் எண்.848 நாள் 26.02.2010 – ல் செலவினம் ரூ.2,60,000/– க்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.031 % குறைவாக திரு.றி.துரை கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

ம.எண்.317/2009–2010

**தீர்மான எண் : 116 – அனுமதிக்கப்பட்டது.**

10. இந்நகராட்சிக்குட்பட்ட சவேரியார்கோவில் சந்திப்பில் தானியங்கி மின்சார சைகை விளக்கு போக்குவரத்தினை ஒழுங்குபடுத்தும் விதமாக கொடையாளர் மூலம் நிறுவப்பட உள்ளதாக குறிப்பிட்டு அதற்கான மின்சாரம் கட்டணமின்றி வழங்க ஆய்வாளர் போக்குவரத்து ஒழுங்குபடுத்தும் பிரிவு அவர்கள் தனது 06.07.2007 –ம் தியதி கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டதன் பேரில் கூடுதல் விபரம் அப்போதைய நகராட்சி ஆணையர், நகராட்சி பொறியரிடம் கோரப்பெற்றதில் ஏற்கனவே இரண்டு தானியங்கி விளக்குகள் நிறுவப்பட்டு பராமரிக்கப்பட்டு வரப்படுவதாகவும் அதற்கான கட்டணம் சாலை பாதுகாப்புக்குழு மூலம் ஈடு செய்து கொள்ளலாம் எனவும் 13.09.1997 – ல் பதிலளித்தன் பேரில் சவேரியார் கோவில் தானியங்கி சைகை விளக்கு நிறுவ மன்ற அனுமதி கோரி பொருள் வைக்கப்பட்டதில் மன்றம் தனது 31.07.2007 – ம் தியதிய நகர்மன்ற தீர்மானம் எண்.752 – ல் மேற்படி சவேரியார்கோவில் சந்திப்பில் நிறுவப்பட்டுள்ள மின்சார சைகை விளக்கிற்கான மின் கட்டணத்தினை செலுத்த அனுமதி அளிக்கப்பட்டதன் பேரில் நகராட்சி ஆணையர், நாகர்கோவில் நகராட்சி பெயரில் நிறுவப்பட உள்ள தானியங்கி சைகை விளக்கிற்கு தனி மின் இணைப்பு பெற ரூ.1650/– மின் வாரியத்திற்கு நகராட்சியால் செலுத்தப்பட்டு தனி மின் இணைப்பு பெறப்பட்டுள்ளது. மேற்படி நிலையில் மீண்டும் வடசேரி காசி விஸ்வநாதர்கோவில் சந்திப்பில் கூடுதலாக ஓர் மின்சார சைகை விளக்கு நிறுவப்பட உள்ளதாகவும் அதற்கு தனி மின்இணைப்பு எடுக்க ரூ.1650/– செலுத்தவும் கேட்டுக் கொள்ளப்பட்டதன் பேரில் மேற்படி தொகையும் நகராட்சியால் செலுத்தப்பட்டு மேற்படி காலத்தில் தனி மின் இணைப்பு பெறப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஆய்வாளர் போக்குவரத்து காவல்துறை அவர்கள் தனது 02.09.2008 –ம் தியதிய கடிதத்தில் பார்வதிபுரம் சானல்கரை, பீச்ரோடு சந்திப்பு இராமன்புதுர் சந்திப்பு விளக்குகள் நிறுவப்பட உள்ளதாக குறிப்பிட்டு அனுமதி கோரப்பெற்றது தொடர்பாக மேற்படி மின் விளக்குகள் அமைக்க தேவைப்படும் மின் அளவு, கொடையாக அமைக்கும் நிறுவனம், அமைக்கப்படும் இடத்தின் வரைபடம், மின்கட்டணம் கொடையாளர்களால் தங்கள் சொந்த செலவில் நேரிடையாக மின்வாரியத்தில் செலுத்தப்படும் என்பதற்கான சான்று ஆகியவற்றினை சமர்ப்பிக்க இவ்வலுவலக 04.09.2008 – ம் தியிதிய கடிதத்தில் கோரப்பட்டிருந்தது. மேற்படி கடிதத்திற்கான பதில் நாளது வரைபெறப்படவில்லை. மேலும் மேற்படி பொருள் தொடர்பான கோரிக்கைகளும் அதன் பின்னர் நாளது வரையிலும் நகராட்சிக்கு வரப்பெறவில்லை. இந்நிலையில் நகரில் நிறுவப்பட்ட மொத்த சைகை விளக்குகள் தொடர்பான விரஙகள் மின் கம்பியாளர்கள் வாயிலாக தல ஆய்வு செய்து சமர்ப்பிக்கப்பட்டதன் பேரில் கீழ்கண்ட விபரப்படி மின்சார சைகை விளக்குகள் நகரில் இருப்பது தெரிய வந்தது.

1. வடசேரி சிவன்கோவில்சந்திப்பு
2. கோட்டார் காவல் நிலைய சந்திப்பு
3. சவேரியார்கோவில் சந்திப்பு
4. செட்டிகுளம் சந்திப்பு
5. உழவர் சந்தை அருகில்
6. வேப்பமூடு சந்திப்பு
7. பூஙகா அருகில்
8. ஒழுகினசேரி சந்திப்பு
9. மாவட்ட ஆட்சியரகம் அருகில்

எனவே மேற்படி மின் விளக்குகளுக்கான மின் கட்டணம் '' டாரிப் V நிரக்கில் மின் வாரியம் மூலம் வசூல் செய்ய.ப்ட்டு வரப்படுவதாகவும், மேற்படி பொருள் தொடர்பாக ( மின் கட்டணம் ) அரசிடமிருந்து எவ்வித மான்யமும் நகராட்சிக்கு வழஙகப்படுவதில்லை என்பதுடன், மேற்படி சைகை விளக்குகள் நிறுவப்பட்ட நாள் முதல் நாளது வரையிலான மற்றும் தொடர்ந்து வரும் மின் கட்டணஙகளை சம்பந்தப்பட்ட நிறுவனஙகள் செலுத்த தக்க நடவடிக்கை எடுக்கும்படி 02.11.2009 – ம் தியதிய கடிதம் வழி ஆய்வாளர் போக்குவரத்து காவல்துறை அவர்களை கோரப்பெற்றிருந்தது. மேற்படி கடிதம் தொார்பான பதில் ஏதும் பெறப்படாததால் மீண்டும் 21.12.2009, 11.03.2010 மற்றும் 12.04.2010 கடிதஙகள் வழி நினைவூட்டவும் பட்டிருந்தது. மேற்படி நிலையில் ஆய்வாளர், போக்குவரத்து காவல்துறை அவர்கள் தனது 07.04.2010 – ம் தியதிய கடிதத்தில் மேற்படி பொருள் தொடர்பான மின் கட்டணஙகள் ''யாமினி சிக்னல்ஸ்'' நிறுவனத்தினரை செலுத்த தெரிவிக்கப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. இந்நிலையில் யாமினி சிக்னல்ஸ் நிறுவனம் தனது 17.04.2010 ம் தியதிய கூடுதலாக நகரில் 19 இடஙகளில் எச்சரிக்கை சைகை விளக்குகள் அமைக்கப்பட இருப்பதாகவும், அதற்கான மின் இணைப்பும் வழஙக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கடிதம் ந.க.எண்.சி3/26764/09 நாள் 24.06.2009 – ம் தியதிய கடிதம் வழி வழஙகப்பட்ட அனுமதி இணைத்து கோரப்பெற்ற நிலையில் மேற்படி பொருள் தொடர்பான கட்டணஙகள் நகராட்சி நிதியில் செலுத்த தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் எவ்வகை வழிவகையும் இல்லை எனவும், மேற்படி மின் கட்டணஙகள் சம்பந்தப்பட்ட நிறுவனஙகள் செலுத்த இயலாத நிலையில் அவைகளை துண்டிக்க வேண்டிய நிர்ப்பந்தமும் நகராட்சிக்கு ஏற்பட்டுள்ளது என குறிப்பிட்டு விரைவாக மேற்படி நிறுவனத்தினை மேற்படி மின் கட்டணஙகளை செலுத்த இவ்வலுவலக 22.04.2010 – ம் தியதிய கடிதத்தில் மீளவும் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் 31.03.2010 முடிய மேற்படி பொருள் தொடர்பான மின் கட்டணஙகளை கணக்கிட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி மின் கட்டணம் நகராட்சி மூலம் மின்வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது.

| வரிசை. எண் | மின் இணைப்பு எண் | பகிர் மானம் | டாரீப் | இணைப்பு பெறப்பட்ட நாள் | 3/2010 முடிய செலுத்தப் பட்ட மின் கட்டணம் | இணைப்பு விபரம் | இடம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6<br>ரூ. | 7 | 8 |
| 1 | J-2 – 572 | IV | V | 29.01.08 | 10173/– | நகராட்சி ஆணையர், நாகர்கோவில் நகராட்சி | வடசேரி சிவன் கோவில் சந்திப்பு |
| 2 | L -5-330 | II | V | 17.07.07 | 4188/– | நகராட்சி ஆணையர், நாகர்கோவில் நகராட்சி | உழவர் சந்தை |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | L -9- 955 | II | V | 30.07.02 | 21716/– | நகராட்சி ஆணையர், நாகர்கோவில் நகராட்சி | ஒழுகினசேரி |
| 4 | G-1-426 | III | V | 10.08.2000 | 208990/– | காவல் கண்காணிப் பாளர் நாகர்கோவில் | மாவட்ட ஆட்சியர் அலுவலக சந்திப்பு |
| 5 | A –5-372 | I | V | 16.10.07 | 10071/– | நகராட்சி ஆணையர், நாகர்கோவில் நகராட்சி | சவேரியார்கோவில் சந்திப்பு |
| 6 | F-6 – 736 | III | V | 21.09.04 | 19748/– | நகராட்சி ஆணையர், நாகர்கோவில் நகராட்சி | செட்டிகுளம் சந்திப்பு |
| 7 | E – 3-659 | III | V | 31.07. 2006 | 19805/– | நகராட்சி ஆணையர், நாகர்கோவில் நகராட்சி | வேப்பமூடு சந்திப்பு |

மேலும் இவ்வலுவலக 30.04.2010 – ம் தியதிய கடிதத்தில் மேற்படி தொகையினை ஒரே தவணையாக செலுத்த தக்க நடவடிக்கை எடுக்கவும் போக்குவரத்து காவல் துறை ஆய்வாளரை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி நிலையில் யாமினி சிக்னல் தனது 20.05.2010 – ம் தியதிய கடிதத்தில் மேற்படி மின் கட்டணத்தினை பட்டியலிட்டு தரும் பட்சம் செலுத்தி விடுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பட்டியல் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழஙக நடவடிக்கை எடுக்கப்பட்டு வரப்படுகிறது. எனவே 30 தினஙகளுக்குள் மேற்படி மின் கட்டணத்தின் விளம்பர கட்டணத்துடன் செலுத்தி முடிக்கும் நிலையில் மற்றும் தொடர்ந்து மின் கட்டணம் செலுத்த ஏதுவாக மேற்படி மின் இணைப்புகளை அதே காலத்திற்குள் மேற்படி நிறுவன முகவரி பெயரில் மாற்றம் செய்ய சம்மதிக்கவும் தனியார் விளம்பரத்திற்கான கட்டண தொகையும் செலுத்த சம்மதிக்கும் நிலையில் மட்டுமே மேற்படி சைகை விளக்குகள் 30 தினஙகள் வரை தொடர அனுமதிக்கவும், தவறும் நிலையில் 01.07.2010 முதல் மேற்படி பொருள் தொடர்பான அனைத்து மின் இணைப்புகளையும் துண்டிக்கவும், சட்ட பூர்வமாக மேற்படி கட்டணத்தினை வசூலிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு –</u> 1. அனுமதிக்கலாம்.

2.மேற்படி பொருள் தொடர்பான அப்போதைய நிலை பற்றி ஜுலை / ஆகஸ்ட் மாத கூட்டத்தில் வைக்கவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

கோப்பு எண்.5650/2007/இ4

**தீர்மான எண் : 117 – அனுமதிக்கப்பட்டது.**

11. இந்நகராட்சிக்கு சொந்தமான முக்கூடல் நீர்த்தேக்கத்திலிருந்து கிருஷ்ணன்கோவில் தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு வரும் 600 mm பிரதான குழாயில் ஏற்பட்ட பழுதுகள் சரி செய்ய 03.03.2010– ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் திரு.எ.ஜோசப் கோல்டு லிவிஙஸ்டன் என தவறுதலாக எழுதப்பட்டு மன்ற தீர்மானம் எண்.911 நாள் 31.03.2010 – ல் அனுமதி பெறப்பட்டுள்ளது என்பதால் பெயரை திருத்தம் செய்து திரு.எ.ஜோஸ்லின் கோல்டு லிவிஙஸ்டன் என்ற பெயரில் வேலை உத்தரவு வழஙக மன்றத்தின் ஒப்புதலுக்கு

**<u>அலுவலக குறிப்பு</u>** –அனுமதிக்கலாம்

ம.எண்.284/2009–2010

**தீர்மான எண் : 118 – <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

12. இந்நகராட்சிக்கு சொந்தமான மார்த்தால் நீரேற்று நிலையத்திலுள்ள 85 H.P. மின் மோட்டாருக்கு மாற்றாக புதிதாக இரண்டு 75 H.P. மின் மோட்டார் அமைக்க தேவையான அறை மற்றும் ஏற்கனவே தரைக்கு மேலாக உள்ளன குழாய்களை தரைக்கு கீழ் தளத்தில் பதிக்கவும் அதற்காகும் செலவினம் ரூ.5,00,000/– க்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.9706/2010/இ3

**தீர்மான எண் : 119 – <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

13. இந்நகராட்சிக்குட்ப.ட்ட 1 முதல் 51 வார்டு பகுதிகளில் குடிநீர் வினியோகம் செய்யப்படுவதில் ஏற்படும் பழுதுகள் 4 மண்டலஙகளாக பிரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி பழுதுகள் சரி செய்யப்பட்டு வருகிறது. அதன்படி 2010–2011 – ம் ஆண்டில் குடிநீர் வினியோகத்தில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினம் மண்டலம் ஒன்றிற்கு 6.00 லட்சத்திற்கும் ரூ.24,00,000/– க்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு. மேலும் இந்த வேலைக்கு டெண்டர் கோரி வேலை துவக்க உத்தரவு வழஙகும் வரை எற்கனவேயே பழுதுகள் பார்த்து வரும் ஒப்பந்ததாரர்கள் மூலம் 2009– 2010 – ம் ஆண்டு விலை விகிதப்படி வழஙகவும் அனுமதி வழஙகலாம்.

**<u>அலுவலக குறிப்பு –</u>** அனுமதிக்கலாம். கோப்பு எண்.9788/2010/இ2

**தீர்மான எண் : 120 – <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

14. இந்நகராட்சி பகுதிக்கு குடிநீர் ஆதாரமான முக்கூடல் அணையிலிருந்து கிருஷ்ணன்கோவில் சுத்திகரிப்பு நிலையத்திற்கு நகராட்சிக்கு சொந்தமான நிலம் வழியாக குழாய் பதித்து தண்ணீர் கொண்டு வரப்படுகிறது மேற்படி குழாய் பதிக்கப்பட்டுள்ள நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்வதை தடுக்கும் பொருட்டு 15 மீட்டருக்கு ஒன்று என்ற வீதத்தில் அடையாள பட்டைகள் இருபக்கமும் சுமார் 7 கிலோ மீட்டர்நீளத்திற்கு அமைக்கவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.15,00,000/– க்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு

**<u>அலுவலக குறிப்பு – அ</u>**னுமதிக்கலாம்.

கோப்பு எண்.9707/2010/இ2

**தீர்மான எண் : 121 – <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

15. இந்நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.19 குளத்துார் காலனி, வார்டு எண்.23 தொல்லவிளை வார்டு எண்.42, வீர சிவாஜி சாலை மற்றும் வார்டு எண்.43 பெரியவிளை ஆகிய பகுதிகளில் ஆழ்துளை கிணறு அமைத்து குடிநீர் வினியோகம் செய்ய கடந்த 14.05.2010 – ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்

1. திரு.றி.வீரமணி மதிப்பீட்டைவிட 0.35 % குறைவு
2. திரு.றி.நேசமணி மதிப்பீட்டைவிட 9.39 % கூடுதல்

**அலுவலக குறிப்பு –** 1. நகர்மன்ற தீர்மானம் எண்.20 நாள் 23.04.2010 – ல் செலவினம் ரூ.6,30,000/– க்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.35 % குறைவாக திரு.றி.வீரமணி கொடுத்துள்ளதை அனுமதிக்கலாம்.

ம.எண்.20/2010 –2011

**தீர்மான எண் : 122 – அனுமதிக்கப்பட்டது.**

16. இந்நகராட்சிக்கு சொந்தமான மார்த்தால் நீரேற்று நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள 85 H.P. சிலிப்பரில் இன்டக்சன் மோட்டார் பம்பு மூலம் அனந்தனார் கால்வாயில் விவசாய பாசனத்திற்காக வரும்தண்ணீரை பம்பு செய்து 600 mm குழாயின் அழுத்த முறிவு தொட்டி ( Break Pressur Tank ) - ல் விழும்படி செய்து குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு தண்ணீர் எடுத்து வரப்படுகிறது. மேற்படி ஒரு மின் மோட்டார் மட்டுமே 1980 – 81 முதல் நிறுவப்பட்டு இயங்கி வருகிறது. ஒரு மோட்டார் மட்டுமே இயங்குவதால் அதன் ஓய்விற்காகவும், உறுதி தன்மைக்காகவும் தினமும் 4.00 மணி நேரம் மோட்டார் இயக்கத்தினை நிறுத்தம் செய்ய வேண்டியது அவசியமாகிறது. வறட்சி காலஙகளில் பாசன கால்வாயில் வரும் தண்ணீரை நாள் முழுவதும் நீரேற்றம் செய்ய ஏதுவாக தற்போது இயஙகி வரும் மோட்டாரைவிட கூடுதல் செயல் திறன் உடைய மின் சிக்கனம் கொண்ட 75 H.P. ஸ்குரில் கோல் மின் மோட்டார் இரண்டு எண்ணம் புதிதாக வாஙகி நிறுவவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.20,00,000/– க்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு

**அலுவலக குறிப்பு –** அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.9664/2010/இ2

**தீர்மான எண் : 123 – அனுமதிக்கப்பட்டது.**

17. இந்நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.11 பறைக்கைன்கால் பண்டு இந்திரா நகரில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணறு பழுது ஏற்பட்டு பயன்படுத்த முடியாத நிலை உள்ளதால் புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்து குடிநீர் வினியோகம் செய்யவும் அதற்காகும் செலவினம் ரூ.2,00,000/– க்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு

**அலுவலக குறிப்பு –** அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.9666/2010/இ2

**தீர்மான எண் : 124 – அனுமதிக்கப்பட்டது.**

18. இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர்சுத்திகரிப்பு நிலைய வளாகத்தின் முன் பகுதியில் உள்ள திறந்த வெளி கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள 3 H.P. மின் மோட்டாரில் உள்ள காயில்களுக்கு பழுது ஏற்பட்டுள்ளது. அதனை சரி செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.30,000/– க்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு

**அலுவலக குறிப்பு –** 1. அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் மன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 125 – அனுமதிக்கப்பட்டது.**

19. இந்நகராட்சி அலுவலக சமுதாய அமைப்பாளர்கள் அறைக்கு 48'' சீலிங பேன் – 3 எண்ணம், ஸ்டீல் வாட்டர்கேன் 20 லிட்டர் கொள்ளளவு கொண்டது ஒரு எண்ணம் மற்றும் ஸ்டீல் கப் ஒரு எண்ணம் வாஙகிட 22.04.2010 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட விலைப்புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம்.

1. நிரீஷ் எலக்ட்ரிக்கல்ஸ், வெட்டூர்ணிமடம், நாகர்கோவில் – ரூ.5090/–
2. வேல்முருகன் ஏஜென்ஸி, அஞ்சுகிராமம் – ரூ.5815/–
3. வருண் எலக்ரிக்கல் சானிட்டரி ஏஜென்ஸிஸ், மைலாடி – ரூ.5410/–

**அலுவலக குறிப்பு –** மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள மூன்று எண்ணம் விலைப்புள்ளிகளில் குறைவான தொகை ரூ.5090/– க்க கொடுத்துள்ள நிரீஷ் எலக்ட்ரிக்கல்ஸ், விலைப்புள்ளியினை அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.17999/2009/இ3

**தீர்மான எண் : 126 – அனுமதிக்கப்பட்டது.**

20. இந்நகராட்சி வாகனம் எண்.றி.என்.74 டி 7817 – க்கு புதியதாக 12 V MHD 1300 - பேட்டரி ஒன்று வாஙகி பொருத்திட 25.05.2010 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட விலைப்புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம்.

1. கென்னடி பேட்டரி ஒர்க்ஸ், நாகர்கோவில் – ரூ.9250/–
2. மாணிக்கம் பேட்டரி ஒர்க்ஸ், நாகர்கோவில் – ரூ.9175/–
3. சிவனேஷ் பேட்டரி ஒர்க்ஸ், நாகர்கோவில் – ரூ.9300/–

**அலுவலக குறிப்பு –** மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான தொகை ரூ.9175/– க்கு கொடுத்துள்ள மாணிக்கம் பேட்டரி ஒர்க்ஸ், நாகர்கோவில் நிறுவன விலைப்புள்ளியை அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.8017/2009/இ3

**தீர்மான எண் : 127 – அனுமதிக்கப்பட்டது.**

21. அரசாணை எண்.66 வீட்டு வசதி துறை மற்றும் நகர் வளர்ச்சித்துறை நாள் 15.05.2009 – ன் படி அனைவருக்கும் வீட்டு வசதி என்பது இந்திய அரசு திட்டத்தின் மிக முக்கியமான கொள்கை பொருளாகும். நாட்டில் வீட்டினை உரிமை கொள்வதை அதிகரிப்பதற்கும் வீட்டு வசதிக்கு கடனளிப்பதை விரிவுபடுத்துவதற்கும் ஏதுவான ஒரு சூழ்நிலையை உருவாக்க அதிகாரம் அளிக்க அரசு ஆராய்ந்துள்ளது. இந்திய அரசு பல்வேறு தேசிய கொள்கைப் பிரகடனங்களில் விட்டுவசதி மற்றும் அனைவருக்கும் குடியிருப்பு வழஙகுவதன் தேவையை முதன்மையாக செயல்படுத்துவதை அமுலுக்கு கொண்டு வந்துள்ளது. பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர் ( EWS) மற்றும் குறைந்த வருவாய் பிரிவினர் ( LIG) ஆகியோருக்கு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு இயக்கம் ( JNNURM ) வழியாக வீட்டு வசதி கடன் வழஙகுவதற்கு ஒரு பெரும் தொடக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி சொந்தமாக வீடு கட்டுவதற்கான நிலம் இருந்து வீட்டுக்கடன் தேவைப்படுவோருக்கும் வீடு அற்றவர்கள் சொந்தமாக புதிதாக வீடு வாஙகி கொள்ள தகுதியான வீட்டை கண்டறிந்துள்ளவர்களுக்கும் '' நகர்ப்புற ஏழைகளுக்கான மானிய வட்டியில் வீட்டு வசதி கடன் வழஙகும் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. நேஷனல் ஹவுஸிங பாஙக் மற்றும் ஹட்கோ நிறுவனம் நோடல் ஏஜென்ஸியாக செயல்படும். இத்திட்டத்தில் பஙகேற்று கடன் வழஙக ஒப்புக்கொள்ளும் வஙகிகள் மற்றும் வீட்டு வசதி நிதி நிறுவனஙகள் வழியாக பயனாளிகளுக்கு கடன் வழஙகப்படும்.

| |
|---|
| **பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர் ( Economically Weaker Section )**<br>மாத வருமானம் ரூ.5000/– க்குள் இருக்க வேண்டும்<br>வீடு கட்டுவதற்கு தேவையான நிலம் 25 சதுர மீட்டர் அல்லது 269 சதுர அடி அளவில் வைத்திருக்க வேண்டும் அல்லது புதிதாக வீடு விலைக்கு வாஙகுவதற்கு தெரிவு செய்திருக்க வேண்டும்.<br>கடன் தொகை ரூ.1,00,000/– |
| **குறைந்த வருவாய் பிரிவினருக்கு ( Low Income Group)**<br>மாத வருமானம் ரூ.5001/– லிருந்து ரூ.10,000/– க்குள் இருக்க வேண்டும்<br>வீடு கட்டுவதற்கு தேவையான நிலம் 40 சதுரமீட்டர் அல்லது 1 சென்ட் அளவில் வைத்திருக்க வேண்டும் அல்லது புதிதாக வீடு விலைக்கு வாஙகுவதற்கு தெரிவு செய்திருக்க வேண்டும்.<br>கடன் தொகை ரூ.1,60,000/– ம் |
| **கடன் தொகை திருப்பி செலுத்துவதற்கான காலஅவகாசம்**<br>15 – 20 வருடஙகள்<br>அனுமதிக்கப்படும் கடன் தொகையின் மீது விதிக்கப்படும் வட்டி விகிதத்தில் வருடத்திற்கு 5 % மானியமாக கணிக்கில் கொள்ளப்படும்<br>1 இலட்சம் வரையிலான தொகைக்கு மட்டுமே மானியம் கணக்கில் கொள்ளப்படும்.<br>SC பிரிவினர்<br>ST பிரிவினர்<br>சிறுபான்மையினர்<br>மாற்றுத்திறனுடையோர் ( Person with disabilities )<br>பெண் பயனாளிகள் |

ஆகியோருக்கு 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையிலான நகரின் மக்கள் தொகை விகிதாசார அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும். மேற்படி விபரஙகளை பொதுமக்கள் தெரிந்திடும் வகையில் ஏதேனும் ஒரு தினசரி நாளிதழில் பிரசுரம் செய்வதற்கும், அதற்கான செலவு தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>அலுவலக குறிப்பு</u> –** 1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

2.தினசரி நாளிதழில் பிரசுரம் செய்வதற்கும் அதற்காகும் செலவுத் தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். கோப்பு எண்.19842/2009/எப்.1

**தீர்மான எண் : 128 – அ.கு. 1. பதிவு செய்யப்பட்டது.**

**2. அனுமதிக்கப்பட்டது.**

22. நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 கட்டையன்விளை சர்வே எண்.அ1/20–19 – ல் உள்ள கிணறு மற்றும் அதை ஒட்டியுள்ள காலியிடத்தை இடத்தின் உரிமையாளர் திரு.U.செல்வராஜ், த/பெ.உதிரமுத்து நாடார் அவர்கள் பொதுமக்கள் நலன் கருதி குடிநீர் பயன்பாட்டிற்காக நகராட்சிக்கு தானமாக தர 25.05.2010 – ல் இசைவு கடிதம் தந்துள்ளார். மேலும் இடத்தினைதானமாக தருவதற்கு கீழ்க்கண்ட முன்று நிபந்தனைகளுடன் தெரிவித்துள்ளார்.

1. தானமாக தரும் இடத்தில் பொதுமக்களுக்கு குடிநீர் வசதி பயன்பாடு தவிர வேறு உபயோகத்திற்கு பயன்படுத்துதல் கூடாது,
2. தானமாக தரும் இடத்திற்கு தனது குடும்பத்தினர் நினைவாக திரு.நீலபெருமாள் நாடார் எனும் பெயரை வைத்து நகராட்சி பராமரிப்பு செய்ய வேண்டும்.
3. தானமாக தரும் கிணற்றிலிருந்து தனது குடும்பத்திற்கு இலவசமாக குடிநீர் இணைப்பு வழஙக வேண்டும்.

எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்படி கிணறு மற்றும் காலியிடத்தை நகராட்சி தானமாக பெறவும் இடத்தின் உரிமையாளரின் மூன்று நிநிந்தனைகளை ஏற்பது குறித்தும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** –மன்றம் பார்வைக்கு முடிவிற்கும் கோப்பு எண்.9419/2010/எப்.1

**தீர்மான எண் : 129 – அனுமதிக்கப்பட்டது.**

23. இந்நகராட்சி பகுதியில் மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011 – பணி தொடர்பான பணியாளர்களுக்கு 22.04.2010 முதல் 17.05.2010 வரை 16 நாட்கள் புரொஜெக்டர் மூலம் திரையிட்டு பயிற்சியளிக்க ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.15,000/– க்கு மன்ற அனுமதி வேண்டுவதோடு, மேற்படி பணியின் அவசரம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்தரவு வழஙகிட காலதாமதமாகும் என்பதால் 21.04.2010 அன்று உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட விலைப்புள்ளிகளையும் மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம்.

1. எம்.மெஸ் இன்போநெட் & மல்டிமீடியா, நாகர்கோவில் – ரூ.15,000/–
2. மீனா ஏஜென்ஸிஸ், நாகர்கோவில் – ரூ17,000/–
3. ரெத்தினாஸ் சிஸ்டம்ஸ் & சர்வீசஸ், நாகர்கோவில – ரூ.18,000/–

**<u>அலுவலக குறிப்பு</u>** – 1 உத்தேச செலவினம் ரூ.15,000/– ஐ செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

2. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான தொகை ரூ.15,000/– க்கு கொடுத்துள்ள எம்.எஸ். இன்போநெட் & மல்டிமீடியா, நாகர்கோவில் நிறுவன விலைப்புள்ளியை அனுமதிக்கலாம்.

3. மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியில் அவசரம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றதலைவர் அவர்கள் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த விலைப்புள்ளிக்கு வேலை உத்திரவு வழஙகி பணி மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.6534/2007/A.P.

**தீர்மான எண் : 130 – அனுமதிக்கப்பட்டது.**

24. இந்நகராட்சிக்கு 2009–2010 – ம் வருட சொர்ண ஜெயந்தி திட்டத்தின் கீழ் நகர்புற கூலி வேலைவாய்ப்பிற்காக நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்கள் செயல்முறை ஆணை எண்.33665/2009/UPA.3 , நாள் 05.10.2009 – ன் படி ரூ.8,07,479/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையுடன் இந்நகராட்சி பொதுநிதி ரூ.2,42,521/– சேர்த்து மொத்தம் ரூ.10,50,000/– க்கு கீழ்க்கண்டவாறு இரண்டு பணிகளை மேற்கொள்ளவும், மேற்படி பணியினை இலாகா மூலம் செய்து முடிக்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>பணிகள் விபரம்</u>**

1 வார்டு எண்.1 – ல் கட்டையன்விளை அரசு காலனியில் மழைநீர் வடிகால் கட்டுதல் – மதிப்பீடு ரூ.5.60 இலட்சத்தில்

2 வார்டு எண்.6 – ல் எம்.ஜி.ஆர்.நகர் குடிசை பகுதிக்கும் அருகுவிளை குடிசைப் பகுதிக்கும் இடைப்பட்ட இடத்தில் ஓடை கட்டுதல்– மதிப்பீடு ரூ.4.90 இலட்சத்தில்

**<u>அலுவலக குறிப்பு</u>** – 1. அரசு மானியத்தொகை ரூ.8,07,479/– போக ரூ.2,42,521/– ஐ பொதுநிதியில் செலவு செய்ய அனுமதிக்கலாம்.

2. ரூ.5.60 இலட்சம் மற்றும் ரூ.4.90 இலட்சத்திற்கான மதிப்பீடுகளை அனுமதிக்கலாம்.

3. மேற்படி பணிகளை சொர்ண ஜெயந்தி நகர்ப்புற கூலி வேலைவாய்ப்புத்திட்ட வழிமுறைகள் படி இலாகா மூலம் செய்யவும் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.9792/2010/இ3

**தீர்மான எண் : 131 – அனுமதிக்கப்பட்டது.**

25. இந்நகராட்சி 12 –வது நிதிக்குழும பரிந்துரை திட்டம் 2008– 2009 – ன் கீழ் கணணி மேம்பாடு செய்தல் மற்றும் நிலுவை மின் கட்டணம் செலுத்துவதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையில் இந்நகராட்சிக்குட்பட்ட வடிவீஸ்வரம் , வட்டவிளை மற்றும் கிருஷ்ணன்கோவில் ஆகிய மூன்று நல்வாழ்வு மையஙகளிலும் உத்தேச செலவினம் ரூ.1, 78,500/– க்கு கீழ்க்கண்டவாறான கணணி மற்றும் கணணி சம்பந்தமான பொருட்கள் DGS & D விலையில் வாஙகி பயன்படுத்திக் கொள்ளமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1. கணணி – 3 எண்ணம்

2. பிரிண்டர் – 3 எண்ணம்

3. Pendrive – 3 எண்ணம்

மேலும் கணணி டேபிள் 3 எண்ணம் மற்றும் செயர் மூன்று எண்ணமும் டான்சி நிறுவனம், திருநெல்வேலி மூலம் நேரடியாக வாங்கி பயன்படுத்தி கொள்ளவும் அதற்கான செலவினத்தை மேற்படி திட்டத்தின் கீழ் செலவு செய்யவும் மற்றும் அரசு மானியத்தொகை போக மீதித்தொகையினை பொதுநிதியில் செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு –</u>** அனுமதிக்கலாம். கோப்பு எண்.19816/2008/இ3

**தீர்மான எண் : 132 – அனுமதிக்கப்பட்டது.**

**26.** ஒருநகிணைந்த குடிசைப்பகுதி மேம்பாட்டு திட்டம் 2008–2009 – ன் கீழ் இந்நகராட்சிக்கு 214 வீடுகள் மற்றும் அடிப்படை வசதிகள் செய்ய ரூ.347.38 லட்சம் அனுமதிக்கப்பட்டு தற்பொழுது குடியிருப்பு வீடுகள் மற்றும் அடிப்படை வசதிகள் செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது.

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் Circular No.13 ( Roc,No.29323/07/IHSDP /BSUP 2) நாள் 10.08.2007 – ல் IHSDP திட்ட பயனாளிகளுக்கு மட்டும் மானியம் அல்லது இலவசமாக குடிநீர் இணைப்பு வழஙக தெரிவிக்கப்பட்டது மன்றத்தின்பார்வைக்கும் ஒப்புதலுக்கும். மேலும் தற்பொழுது குடியிருப்பு வீடுகளுக்கு Initial Amount Rs,3000/- பெறப்பட்டு வருகிறது.

**<u>அலுவலக குறிப்பு –</u>** 1. அனுமதிக்கலாம்.

2. IHSDP திட்ட பயனாளிகளுக்கு மட்டும் வழஙகப்படும் குடிநீர் இணைப்புகள் மற்றும் வழஙகப்பட்ட குடிநீர் இணைப்புகளுக்கு குறைந்த கட்டணம் நிர்ணயம் செய்வது சம்பந்தமாக மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

கோப்பு எண்.6940/2006/இ1

**தீர்மான எண் : 133 – Initial Amount – ல் ரூ.1000/– மட்டும் குறைவு செய்ய தீர்மானிக்கப்பட்டது.**

**27.** இந்நகராட்சிக்கு சொந்தமான முக்கூடல் அணையின் நிர் மட்டம் கோடை காலஙகளில் நகராட்சி பகுதியில் குடிநீர் வினியோகம் செய்ய போதுமானதாக இல்லாமல் குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் சூழுநிலை உள்ளதால் பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி அணைகளிலிருந்து அனந்தனார் சானலில் வரும் தண்ணீரை அணைக்கு நீரேற்றம் செய்ய கூடுதலாக ஒரு நீரேற்றம் அமைத்து 160 H.P. மின்மோட்டார் நிறுவி தண்ணீர் நீரேற்றம் செய்தால் அணையின் நீர்மட்டம் குறையாமல் இருக்கும் என்பதால் புதிதாக ஒரு நீரேற்றம் ரூ.50,00,000/– மதிப்பில் அமைக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு

**<u>அலுவலக குறிப்பு –</u>** ரூ.50,00,000/– பொது நிதியில் குடிநீர் தலைப்பில் ஒதுக்கீடு செய்தால் வார்டு பகுதியில் பணிகள் செய்ய நிதி பற்றாகுறை ஏற்படும் என்பதால் Gap filling நிதியில் OAM (or) Infrastructure – ல் அரசாஙக நிதி பெற்று மேற்படி பணி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு

எண்.9708/2010/இ2

**தீர்மான எண் : 134 – அனுமதிக்கப்பட்டது.**

28. இ.ந்கராட்சிக்கு சொந்தமான சர்.சிபி.இராமசாமி ஐயர் நினைவு பூஙகாவினை பார்வையிட வருகை தரும் பொது மக்களிடம் ஓராண்டிற்கு கட்டணம் வசூலிக்க தேவையான ரசீது புத்தகஙகள் அச்சடித்து தர 12.05.2010 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பெற்றதில் கீழ்க்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின்பார்வைக்கும் முடிவிற்கும்

| வரிசை எண் | விலைப்புள்ளி சமர்ப்பித்த நிறுவன விபரம் | விலைப்புள்ளித்தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஜாபிபிரிண்டர்ஸ், நாகர்கோவில் – 1 | 7400/– |
| 2 | சிந்து கம்யூட்டர் பிரிண்டர்ஸ், நாகர்கோவில் –1 | 7850/– |
| 3 | சலோன்லேசர் ஆப்செட், நாகர்கோவில் –1 | 8040/– |

**<u>அலுவலக குறிப்பு</u> –** 1. மேற்படி விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி சமர்ப்பித்த ஜாபி பிரிண்டர்ஸ், நாகர்கோவில் நிறுவனம் மூலம் அச்சடித்து வாஙக மன்றம் அனுமதி வழஙகலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் முன்அனுமதி பெற்று ரசீது புத்தகஙகள் அச்சடிக்க நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி செலவினம் ரூ.7400/– க்கும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

கோப்பு எண்.6248/2009/ அ13

**தீர்மான எண் : 135 – அனுமதிக்கப்பட்டது.**

29. இந்நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேரூந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள உயர் கோபுர மின் விளக்கு ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் பழுது நீக்கம் செய்ய 25.01.2010 – ம் தியதிய நகர்மன்ற தீர்மானம் எண்.779 – ல் மன்றம் அனுமதி வழஙகியதன் பேரில் 31.03.2010 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பெற்றதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வரிசை எண் | ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த நிறுவனத்தின் முகவரி | மதிப்பீட்டு விடகுறைவு | விலைவிகிதத்தினை கூடுதல் |
|---|---|---|---|
| 1 | M/S .Prakash & Co, Nagercoil | – | 3.31 % |
| 2 | M/S.Hi.Tech Associates. Konam | 0. 13% | – |

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**<u>அலுவலக குறிப்பு</u> –** மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.13 % குறைவாக கொடுத்துள்ள M/S.Hi.Tech Associates நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொண்டு வேலை உத்தரவு வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

ம.எண்.329/2009–2010

**தீர்மான எண் : 136 – அனுமதிக்கப்பட்டது.**

30. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23 – ல் வட்டக்கரை குறுக்குச்சாலை மற்றும் பெருமாள் நகரில் தார் சாலை அமைக்கும் பணிக்கு – பன்னிரண்டாவது நிதியின் கீழ் 30.10.2009 தேதிய நகர்மன்றத்தீர்மான எண்..488 – ன் படி அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.5.00 இலட்சத்தில் 26.05.2010 அன்று ஒப்பந்தப்புள்ளி வரப்பட்ட இரண்டாவது முறை (e-Tender ) கோரப்பெற்றதில் கீழ்க்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. அவைகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

ஒப்பந்தப்புள்ளி விபரம்

| | | |
|---|---|---|
| 1) | திரு.ஐ.பாஸ்கரன் | (–)20.06 % மதிப்பீட்டை விட குறைவு |
| 2) | திரு .ஜே.ஜீவராஜ் | (–) 18.26 % மதிப்பீட்டை விட குறைவு |
| 3 | திரு.பி.ராஜகோபால் | (–) 15.50 % மதிப்பீட்டை விட குறைவு |

அலுவலக குறிப்பு – 1. வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை கொடுத்துள்ள திரு.ஐ.பாஸ்கரன் 20.06 % மதிப்பீட்டைவிட குறைவு கொடுத்துள்ளமையால் மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள தொகை ரூ.99,893/– ல் 50 % தொகையான ரூ.49,946/– ஐ பொதுப்பணி துறை முதன்மை பொறியாளர் செயல்முறை உத்தரவு எண்.டி1/50CR/C-10/2006 நாள் 04.02.2006–ன் படி கூடுதல் வைப்புத்தொகையாக செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

2. அலுவலகத்திலிருந்து அனுப்பப்படும் அறிவிப்பு பெறப்பட்ட 7 தினஙகளுக்குள் கூடுதல் வைப்புத்தொகை ரூ. 49,946/– நகராட்சியில் செலுத்தி வேலை உத்தரவு பெற்று கொள்ளப்படாத நிலையில் மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த ஒப்பந்தக்காரரின் வைப்புத்தொகையினை பறிமுதல் செய்யவும் மேற்படி பணிக்கு மறு ஒப்பந்தபுள்ளி கோரவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

3. மேற்படி பணிக்கு உரிய தர சான்று பெறப்பட்ட பின்னர் பட்டியல் தொகை வழஙகவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

ம. எண்.

119/2010–2011

**தீர்மான எண் : 137 – அனுமதிக்கப்பட்டது.**